இயல் 6.3 - விகிதம்

பயிற்சி எண் :: 6.3.2.3.C

ஓரலகு முறை - பயிற்சி

வினா

அடுத்தடுத்து இருக்கும் இரு கடைகளில் குமார் தக்காளிப்பழத்தின் விலை கேட்கிறான். முதல் கடையில் 6 கிலோ ₹180 எனவும் இரண்டாம் கடையில் ₹100-க்கு 4 கிலோ எனவும் விலை சொல்கின்றனர். எந்தக்கடையில் தக்களிப்பழம் வாங்கினால் குமாருக்கு இலாபமாக அமையும்?



இரண்டு கடைகளில் சொல்லப்பட்ட விலை விவரங்களிருந்து, 1 கிலோ தக்காளியின் விலையைக்கண்டுபிடித்தால் நம்மால் எளிதில் விடையை கண்டுபிடிக்க இயலும்.

6 கிலோ தக்காளிக்கு முதல் கடையில் சொல்லப்பட்ட விலை $= ₹180$

அவ்வாறெனில், முதல் கடையில் ஒரு கிலோ தக்காளியின் விலை $= \left(\frac{180 \times 1}{6}\right) = ₹30$

4 கிலோ தக்காளிக்கு இரண்டாம் கடையில் சொல்லப்பட்ட விலை $= ₹100$

அவ்வாறெனில், இரண்டாம் கடையில் ஒரு கிலோ தக்காளியின் விலை $= \left(\frac{100 \times 1}{4}\right) = ₹25$

முதல் கடையில் ஒரு கிலோ தக்காளியின் விலை **₹30** ஆகும். இரண்டாம் கடையில் ஒரு கிலோ தக்காளியின் விலை **₹25** ஆகும். எனவே, இரண்டாம் கடையில் வாங்குவதே குமாருக்கு இலாபமாக அமையும்.

Sum & solution prepared on Thursday 17th June, 2021 :: 07:27 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.